

திருஅருட்பிரகாச வள்ளலாரின் 203ஆம் வருவிக்க உற்றநாள் விழாவினை முன்னிட்டு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் 05.10.2025 அன்று கடலூர் மாவட்டம், வடலூர், திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு, சன்மார்க்க கொடியினை ஏற்றி வைத்து, அன்னதானத்தை தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்ய செந்தில்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ம. இராஜசேகரன், இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர் திருமதி சி.ஜோதி, உதவி ஆணையர் ஆர். சந்திரன், நிர்வாக அலுவலர் ஜெ. ராஜா சரவணகுமார், அரசு அலுவலர்கள் மற்றும் சன்மார்க்க அன்பர்கள் கலந்து கொண்டனர்.



திருச்செந்தூர் வட்டம் காயல்பட்டினம் நகராட்சி ஓடக்கரையில் மீன்வளம் மீனவர்நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் புதிய பேருந்து நிறுத்தத்திற்கு அடிக்கல் நாட்டினார். உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், காயல்பட்டினம் நகர மன்ற தலைவர் முத்து முகம்மது, ஒன்றிய செயலாளர்கள் ஏ.பி.ரமேஷ், கே.கே.ஆர்.ஜெயக்கொடி, ஆழ்வை முன்னாள் சேர்மன் ஜனகர், நகரச் செயலாளர் வாள் சுடலை, நகர மன்ற உறுப்பினர்கள் செந்தில் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# செஞ்சியில் சமூக நீதி மாணவியர் விடுதி திறப்பு!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

செஞ்சி அக் 7.

செஞ்சி தொகுதியில் 8.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டசமூக நீதி மாணவியர் விடுதி, 14 கூடுதல்வகுப்பறை கட்டிடங்களை முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததையடுத்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் ஆகியோர் சமூக நீதி விடுதி மற்றும் பள்ளி வகுப்பறை கட்டிடத்தில் மாணவமாணவிகளுக்கு இனிப்பு வழங்கினர்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறை சார்பில் தாட்கோ திட்டத்தின் கீழ் 5.59கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமூக நீதி மாணவியர் விடுதி கட்டிடமும்,செஞ்சி ஒன்றியம் கவரை ஊராட்சியில் உள்ள ஆதிதிராவிடர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 3.17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 14கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக செஞ்சி பேரூராட்சியில் 5.59கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமூக நீதி மாணவியர் விடுதியும், 3.17 கோடி. ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 14 கூடுதல் பள்ளி வகுப்பறை கட்டத்தை திறந்து வைத்தார்.

இதையடுத்துசமூக நீதி மாணவியர் விடுதி கட்டிடத்திலும் கவரை அரசு மேல்நிலைப்பள்ளிகூடுதல் வகுப்பறை கட்டிடத்திலும் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம் எல்ஏ,விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் ஆகியோர் மாணவ மாணவிகளுக்கு இனிப்புகளை வழங்கினர்.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் வளர்மதி, தாட்கோ செயற்பொறியாளர் அன்பு சாந்தி,செஞ்சி வட்டாட்சியர் துரைசெல்வன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விடுதிக் காப்பாளர் உமா மகேஸ்வரி அனைவருக்கும் நன்றி கூறினார்.

### எம்.ஏ.எம்.ஷெரீப் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# தென்காசி தெற்கு மாவட்டத்தில் இலவச மருத்துவ முகாம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் துவக்கி வைத்தார்!

தென்காசி.அக்.7

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தெற்கு மாவட்ட பொருளாளர் எம்.ஏ.எம்.ஷெரீப் ஏற்பாட்டில்

தென்காசி மெடிக்கல் சென்டர் மற்றும் ப்ரோ விஷன் ஐகேர் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் இலத்தூர் லட்சுமி ஹரிஹர உயர்நிலைப் பள்ளியில் செங்கோட்டை ஒன்றிய செயலாளர் ஆ.ரவி சங்கர் தலைமையில் மாவட்ட துணை செயலாளர்கள் கென்னடி,கனிமொழி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஷேக்தாவுது, பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், சாமிதுரை, தமிழ்ச்செல்வி, ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பங்கேற்று இலவச மருத்துவ முகாமை துவக்கி வைத்தார்.

இந்த முகாமில் சிறப்பு மருத்துவர்கள் பங்கேற்று 350 பேர்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொண்டனர்.

நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் திவான் ஒலி,அழகுசுந்தரம்,பேரூர் செயலாளர்கள் கோபால், துரை, தங்கப்பா, ராஜராஜன், சார்பு அணி நிர்வாகிகள் கனியப்பா, இஸ்மாயில், வாசுதேவன், பரமசிவம், இசக்கிபாண்டி, அழகு தமிழ் சங்கர், சபிக் அலி, சமூக செயற்பாட்டாளர் மஹ்மூதா சையது, சோபனா ராணி மற்றும் கழகத்தினர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

இந்த இலவச மருத்துவ முகாம் மூலம் ஏழை,எளிய மக்கள் 350 பேர்கள் பயன் பெற்றுள்ளனர்.

இலவச மருத்துவ முகாம் ஏற்பாடுகளை தென்காசி தெற்கு மாவட்டப் பொருளாளர் எம்.ஏ.எம்.ஷெரீப் செய்திருந்தார்.

### அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமை! பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் முன்னிலை!

# மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மதுரை, அக்.7-

மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



மதுரை மாநகர் மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் நாளை (08.10.2025 - புதன்கிழமை) மாலை 05.00 மணி அளவில் அண்ணாநகர் ட்வின்ஸ் மஹாலில், மண்டல பொறுப்பாளர் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றம் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் முன்னிலையில் நடைபெற இருப்பதால் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : • வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (#SIR) குறித்து

• கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### கதிர் ஆனந்த் எம்.பி. தொடங்கி வைக்கிறார்!

# கேரள மாநில உள்ளாட்சித் தேர்தல் பரப்புரை!

## கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை!

திருவனந்தபுரம், அக்.7-

கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



நடைபெற இருக்கும் கேரள மாநில உள்ளாட்சித் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட தலைமைக் கழகத்தில் அனுமதி கோரப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக கேரள மாநிலம் முழுவதும் கழகத்திற்கு வெற்றி வாய்ப்பு உள்ள இடங்களில் போட்டியிட தயாராகி வருகிறது.

கொல்லம் மாவட்டம் புனலூர் நகரசபை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வெற்றி வாய்ப்பு உள்ள நகரசபையாக கண்டறியப்பட்டுள்ளது. வரும் 11.10.2025 சனிக்கிழமை காலை புனலூர் நகரில் உள்ள 36 நகரசபை வார்டுகளில் 100 க்கும் மேற்பட்ட ஆட்டோ, கார் போன்ற வாகனங்களில் வாகன அணிவகுப்பு ஊர்வலம் நடைபெறுகிறது.

இந்த ஊர்வலத்தை கொல்லம் மாவட்டக் கழக செயலாளர் ரெஜிராஜ் தலைமையில் ஏ.கே. நவாஸ், அஜ்மல் பினஜமால், ராமர் சீனிவாசன், ஷாஜி வாலக்கோடு ஆகியோர் முன்னிலையில் தென்காசி முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சிவ.பத்மநாதன் தொடங்கி வைக்கிறார்.

இந்த ஊர்வலம் புனலூர் நகரில் உள்ள 36 வார்டுகளில் பயணித்து மாலை 4 மணியளவில் புனலூர் டவுனில் உள்ள டி.பி. ஜங்ஷன் வந்தடைகிறது. பின்னர் டி.பி.ஜங்சன் ஷாலினி திடலில் கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் (எனது) தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாநில அமைப்பாளர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் எம்.பி., அவர்கள் கலந்து கொண்டு கேரள மாநில திமுகவின் உள்ளாட்சித் தேர்தல் பரப்புரையை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்த நிகழ்ச்சியில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட கழக பொருளாளர் ஐ.கேட்சன், குழித்துறை நகர்மன்ற தலைவர் பொன்.ஆசைத்தம்பி, கன்னியாகுமரி மேற்கு மாவட்ட கழக முன்னாள் துணை செயலாளர் ஐ. ஜாண் கிரிஸ்டோபர், ஒருங்கிணைந்த கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் சிற்றாறு ரவிச்சந்திரன், பலுகல் பேரூராட்சி தலைவர் லிஜி விஜின், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் ததேயூ பிரேம் குமார், பலுகல் பேரூர் செயலாளர் போஸ், முன்னாள் திருவட்டாறு ஒன்றிய கழக செயலாளரும் முன்னாள் தலைமை செயற்குழு உறுப்பினர் ஒய்.ராஜேந்திரன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் அமானுல்லா, திருவட்டாறு முன்னாள் ஒன்றிய கழக துணை செயலாளர் கலைகிரி, முன்னாள் களியல் பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் சிற்றாறு மணோகரன், மாநில இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், மாநில திமுக இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் விபின் முருகேசன், ஹரிகுமார், துரை பேச்சிமுத்து, அருள் ஜோதி திருவனந்தபுரம் மாவட்டக் கழக செயலாளர் அனீஷ், புனலூர் ஷாம்லால், ரினுராஜன், ஹரி, பசுலூதீன், பி.கே.பாபு, சதாசிவம் ஆசாரி, அய்யப்பன், அச்சு பிலால், கோபாலகிருஷ்ணன், லால்ஜி, கீதா, ராணி, சுலோச்சனா, ஹேமா, திவ்யா மற்றும் 500க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொளகின்றனர். இந்த நிகழ்ச்சியில் கொல்லம் மாவட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கேரள மாநில திமுக அமைப்பாளர் கே. ஆர்.முருகேசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அரசு மருத்துவமனையில் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட இரத்த வங்கி கட்டிடத்தை தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் 04.10.2025 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் கலந்து கொண்டு ரத்ததானம் செய்தனர். இந்நிகழ்வின் போது மாவட்ட சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் டாக்டர்.என்.ராஜசேகரன்,கோத்தகிரி உட்பட மருத்துவர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்ட தலைமை மருத்துவமனை கூடுதல் கட்டிடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி க.சிவசௌந்தரவள்ளி தலைமையில் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் என்.கே.ஆர்.சூரியகுமார், எஸ்.ராஜேந்திரன், ஆ.சம்பத்குமார், கே. முருகேசன், கே.ஏ.குணசேகரன், அ.மோகன்ராஜ், எம்.ராஜேந்திரன், சு.அரசு, டி.ரகுநாத், சங்கிதாவெங்கடேசன், திருமதி.திருமுருகன், விஜயாஅருணாசலம், டி.சந்திரசேகர் மற்றும் பலர் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



புதூர் ஊராட்சி ஒன்றியம், மிட்டாவடமலாபுரம் ஊராட்சி, மல்லீஸ்வரபுரம் பிரிவு சாலையில் முதல்வரின் கிராமச் சாலை திட்டத்தின் கீழ் ரூ.64.75லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.நிகழ்வில் புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், ஒன்றிய துணைச் செயலாளர் செல்லப்பாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.